இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 05 | திகதி : 20.03.2022 | விலை : 30.00

## சிறுவர்களை இறை விசுவாசத்தில் வளர்ப்பது காலத்தின் தேவை

### திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களிடம் மன்னார் ஆயர்

### யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த 45 ஊக்குவிப்பாளர்கள் தேர்ச்சி பெற்றனர்



யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்டங்களைச் சேர்ந்த தொண்ணூறு திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான இரண்டாவது வதிவிடப் பயிற்சி நெறியும், சின்னம் சூட்டும் விழாவும் கடந்த 13ம் திகதி சிலாபம் மறை மாவட்டம் மாதம்பேயில் அமைந்துள்ள தியான இல்லத்தில் நடைபெற்றது. 02

## வலியோடு ஒரு பயணம்

### சிலுவைப்பாதை நூல் வெளியீடு



தவக்காலத்தை முன்னிட்டு இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய சிந்தனைகளின் கூட்டுத் தொகுப்பாக 'வலியோடு ஒரு பயணம்' எனும் சிலுவைப்பாதைச் சிந்தனைக் கைநூல் ஒன்றை அருட்பணி சி.அ.அருட்செல்வன் அடிகளார் வெளியிட்டுள்ளார்.

யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார், அருட்பணி சி.அ.அருட்செல்வன் அடிகளாரிடமிருந்து இதன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வு 13.03.2022 ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய முன்றலில் நடைபெற்றது. இளவாலை மறைக்கோட்டக் குருமுதல்வர் சி.ஜே.ஜெயக்குமார் அடிகளாரும், அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும், பங்கு மக்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்நூல் உரைநடை வடிவில் அல்லாது புதுக் கவிதைப் பாணியில் அமைந்துள்ளது. இதை ஆறுதலான மனநிலையோடு வாசித்துப் புரிதலை ஏற்படுத்தி இயேசுவின் கல்வாரிப் பாதையில் பயணிக்க ஆசிரியர் அவர்கள் அழைத்து நிற்கின்றார். இந்நூல் நூலாசிரியரின் கன்னிப்படைப்பு என்பது குறிப்பிடத் தக்கது.

## குறைந்த பக்தர்களுடன் கச்சதீவுப் பெருநாள்



கச்சதீவு வருடாந்தத் திருவிழா 11ஆம் 12ஆம் திகதிகளில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. நாட்டில் நிலவிவரும் பெருந் தொற்றுக் காரணமாக இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களோடு இவ்விழா நடைபெற்றுள்ளது. திருவிழாவிற்குத் தமிழகத்திலிருந்து 76 பக்தர்களும் இலங்கையிலிருந்து 88 பக்தர்களும் கலந்து கொண்டனர்.

## இரணைதீவு வேளாங்கண்ணி ஆலயம் புனர் நிர்மாணம்



இரணைதீவில் நீண்டகாலமாகச் சேதமடைந்திருந்த வேளாங்கண்ணி சிற்றாலயம். இறைமக்கள் உதவியுடன் மீண்டும் புனரமைக்கப்பட்டு 12ம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி யேசுதாஸ் அடிகளாரால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது. உதவி செய்த இறைமக்களுக்குப் பங்குத் தந்தை அருட்பணி ம. பத்திநாதர் அடிகள் நன்றி தெரிவித்தார். அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் அடிகளாரும் இந் நிகழ்வில் இணைந்து சிறப்பித்திருந்தார்.

## நெடுந்தீவுப் பங்கைத் தரிசித்த குரு முதல்வர்



நெடுந்தீவுப் பங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் மகா ஞானொடுக்கத்தின் ஒரு நிகழ்வாக முன்னெடுக்கப்பட்ட திருச் செபமாலைப் பவனி கடந்த 05ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

நெடுந்தீவு புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நெடுந்தீவின் பிரதான வீதி வழியாக, புனித அந்தோனியார் ஆலயத்தில் நிறைவடைந்த இத்திருச் செபமாலைப் பவனியில் யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் கலந்து கொண்டு இறுதி ஆசீரை வழங்கினார். அத்துடன் நெடுந்தீவுப் பங்கைத் தரிசித்த குருமுதல்வர் அவர்கள் அங்கு உள்ள ஆலயங்களின் நிர்வாகங்களுடனும் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்.

## இரணைதீவில் தவக்காலத் தியானம்



முழங்காவில் பங்கில் இரணைதீவில் வருடம் தோறும் இடம்பெறும் தவக்கால யாத்திரைச் சிலுவைப்பாதைத் தியானமும், நற்கருணை வழிபாடும்,திருப்பலியும் கடந்த 11ம், 12ம் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் இடம்பெற்றன.

வெள்ளிக்கிழமை மாலை பெரிய சிலுவைப் பாதைத் தியானமும், தொடர்ந்து திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் உடுவில் பங்குத் தந்தை அருட்பணி S. லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் இடம்பெற்றது. மறு நாள் சனி காலை கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுதாஸ் அடிகள் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அனைத்து ஒழுங்குகளையும் இரணைதீவு இறைமக்களோடு இணைந்து பங்குத்தந்தை அருட்பணி ம.பத்திநாதர் ஒழுங்கு செய்திருந்தார். இத்தியானத்தில் 800 இற்கும் மேற்பட்ட இறைமக்கள் கலந்து பயன்பெற்றனர்.

# எமது எண்ணம்

## இந்திய நிதியுதவியும் ஈழத்தமிழர்களும்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி என்பது அதாவது விலைவாசி உயர்வு என்பது இன்று தீவின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் மக்களைப் பாதித்திருக் கின்றது. இந்தப் பாதிப்பு தொடரவும் போகின்றது. நாம் எப்போ? எப்படி? இதிலிருந்து மீளப்போகின்றோம் என்பது தான் இன்றைய பேசு பொருளாகவுள்ளது. 2.4 பில்லியன் டொலர்களை வழங்குவதாக இந்தியா கடந்த வருடம் டிசம்பர் மாதம் வாக்குறுதியளித்திருந்தது. முதலில் ஒரு பில்லியன் டொலர்களை வழங்கும் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவது என்று இணக்கம் ஏற்பட்டிருந்தது.

ஆனால் ரஷ்யா- உக்ரெய்ன் போர் ஆரம்பித்ததால் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நடவடிக்கை பிற்போடப்பட்டது. ஆனாலும் சென்ற வாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் அதி உச்சக் கோரிக்கையாகும். ஆனால் தமிழ் மக்கள் கோருகின்ற முழுமையான சமஸ்டி ஆட்சி முறை பற்றிப் பேசிய-தாகத் தெரியவில்லை.

13 பற்றிய அழுத்தமும் ஒப்பாசாரத்துக்காகப் பேசப்பட்ட ஒன்றே. ஆனால் இலங்கையிடம் இருந்து இந்தியாவின் புவி சார் அரசியல் நலனுக்காகப் பேரம் பேசப்பட்ட விவகாரங்களே அதிகமாகத் தென்படுகின்றன.

குறிப்பாகச் சீனாவை மையமாகக் கொண்ட இந்தோ- பசுபிக் பாதுகாப்புக்காகத் தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்குக் கிழக்கில் பல பிரதேசங்களைத் தாரைவார்த்த நிலையிலேயே ஒரு பில்லியன் டொலரை நிதியுதவியாகப் பெறுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது.

நிதியமைச்சர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாகக் கொழும்பில் உள்ள நிதியமைச்சு கடந்த வாரம் தெரிவித்துள்ளது.

புதுடில்லிக்குச் சென்ற நிதியமைச்சர் பிரதமர் நரேந்திரமோடி, வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோரைச் சந்தித்த பின்னரே இந்த ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டுள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி இந்தியாவின் மூலோபாய நலன்களை வலுப்படுத்தும் கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவது தொடர்பாக இலங்கை இந்தியாவுக்கு வாக்குறுதியளித்துள்ளது.

அத்துடன் திருகோணமலைத் துறைமுகச் சூழலில் கப்பல் பழுதுபார்க்கும் தளம் ஒன்றை நிறுவுவதற்கும் அமெரிக்க கடற்படையின் முயற்சியான பஹ்ரைனைத் தளமாகக் கொண்ட உளவுத்துறை பகிர்வு அலுவலகத்தில் கடற்படை அதிகாரி ஒரு-வரை நியமிக்கவும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு அருகிலுள்ள சம்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மன்னார், பூநகரி மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளில் சூரிய சக்தித் திட்டங்களை மேற்கொள்ளவும் இந்தியாவிற்கு உத்தரவாதம் வழங்கப் பட்டுள்ளது.

இந்தியாவின் வணிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப் பாணம் பலாலி விமான நிலையத்தைப் பயன்படுத்தவும் இலங்கை உடன் பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் கலாசாரத் திட்டங்களைச் செயற்படுத்தவும் இந்தியாவிற்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

ஆகவே இலங்கை தற்போது எதிர்நோக்கியிருக்கும் நிதி நெருக்கடியைப் பயன்படுத்தி அமெரிக்க- இந்திய அரசுகள் தமது இந்தோ- பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களையே முன்னிலைப்படுத்தும் என்பது தெரிந்த ஒன்றுதான்.

ஆனாலும் இலங்கைத்தீவின் நெருக்கடிக்குக் காரண-மான உண்மைக் காரணிகளைக் கண்டுபிடித்து நிதியைக் கையளிக்கும் நிலையில் அமெரிக்க- இந்திய அரசுகள் இல்லை. இருந்தாலும் இந்தியாவைப் பொறுத்தவரை அயல்நாடு என்ற அடிப்படையில் ஒப்பாசாரத்துக்காகவேனும் 13 பற்றிப் பேசிவிட்டு முற்று முழுதாகத் தனது அரசியல், பொருளா-தார நலன்களை அதுவும் இலங்கையில் சீன ஆதிக்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை மையப்படுத்தி வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இந்திய முதலீடுகள் என்ற போர்வையில், தமிழர் பிரதேசங்கள் இந்தியக் கண்காணிப்பில் கொண்டு வரப்பட்டுள்ளதெனலாம்.

இதற்காக இந்திய இலங்கை ஒப்பந்தம் நன்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் 13 ஐ வலியுறுத்தி இந்தியப் பிரதமருக்குக் கையளித்த கடிதத்தின் அறிவுறுத்தல் அரசியல் (Instruction Politics) இப்போது பலருக்கும் புரிந்திருக்கும்.

தமிழர் ஒரு தேசமாகச் சிந்தித்து ஒருமித்த கருத்துடன் ஒன்றுபடாதவரை வல்லரசுகளின் இப்படியான புவிசார் நலன் அரசியல் நகர்வுகளுக்குள்ளேதான் தமிழர்களின் அரசியல் விடுதலையும் அமுங்க வேண்டிய நிலை தொடரும்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# தவக்காலம், தேவையில் இருப்போரைத் தேடிச்சென்று உதவுவோம்



தவக்காலம், தேவையில் இருப்போரைத் தேடிச் சென்று, அவர்களின் உடல், உள்ளத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற காலம் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தமது தவக்காலச் சிந்தனையொன்றில் தெரிவித்துள்ளார்.

“உதவி தேவைப்படுவோரைக் கண்டு விலகிச் செல்லாமல் அவர்களைத் தேடிச் சென்று, அவர்களுக்குப் பரிவன்போடு செவிமடுக்கவும், நல்ல வார்த்தைகளைக் கூறவும், தனிமையில் இருப்போரைப் புறக்கணியாமல் அவர்களைச் சந்திக்கவும் ஏற்ற காலம் தவக்காலம்” எனத் திருத்தந்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

# பெண்கள் மீதான அடக்குமுறைகள் கட்டுப்பாடுகள் வன்முறைகள் இல்லாதொழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

யாழ் மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார்

கத்தோலிக்க திருஅவையின் பொது-நிலை செயற்பாடுகளில் பெண்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டுமெனவும் சமூகத்தில் அண்மைக்காலங்களில் அதிகரித்துவரும் பெண்கள் மீதான அடக்குமுறைகள் கட்டுப்பாடுகள் வன்முறைகள் என்பவை முற்றாக இல்லாதொழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் யாழ் மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அவர்கள் யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்ற மகளிர் தின சிறப்பு நிகழ்வில் தெரிவித்தார்.

யாழ். திருமறைக்கலாமன்றமும் அமல மரித்தியாகிகள் சபையின் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகமும் இணைந்து முன்னெடுத்த சர்வதேச மகளிர் தின சிறப்பு நிகழ்வு 08ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஸ்ர விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது

### வாசகர்களின் கனிவான கவனத்திற்கு

தற்போதய பொருளாதர நெருக்கடி நிலைமையினால் ஏற்பட்டுள்ள அச்சுப் பொருட்கள், காகிதாதிகள் என்பவற்றின் அதீத விலையேற்றத்தினாலும் தட்டுப்பாட்டினாலும் பாதுகாவலன் பத்திரிகையை எட்டுப்பக்கங்களாக மட்டுப்படுத்தியுள்ளோம். இதனால் வாசகர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம். நிலைமை சீராகும் போது பாதுகாவலன் 12 பக்கங்களுடன் வெளிவரும். நன்றி

-ஆசிரியர்-

## புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 11 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தேர்ச்சி

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலத்தில் 11 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். வரலாற்றில் 11 பேர் இப்பாடசாலையில் இருந்து சித்தியடைந்தமை இதுவே முதல் தடவையாகும். இவர்களுள் செல்வி உபாமதி கபிலாசினி 187 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 2ம் நிலையைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அன்பிய செயற்குழு ஒன்று கூடியது



யாழ் அன்பிய வளவாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடனான ஒன்றுகூடல் யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் 17.03.2022 அன்று இடம்பெற்றது. அன்பிய ஆண்டின் திட்டமிடல் நிகழ்வாக இது இடம்பெற்றது.

## நல்லூர் புனித பெனடிக்ற் வித்தியாலயத்தில் 100 விகிதமான மாணவர்கள் சித்தி



பிரசன்னா தணிகன்



கிருஸ்ணகுமார் சகானன்

நல்லூர் புனித பெனடிக்ற் றோ.க வித்தியாலயத்திலிருந்து 2021 ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்த்சைக்கு தோற்றிய மாணவர்களில் 25 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்ததுடன் அனைத்து மாணவர்களும் சித்தி புள்ளிக்கு மேல் பெற்று 100% சித்தியைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் இரு மாணவர்கள் 188 புள்ளிகளைப் பெற்று பாடசாலை ரீதியாக முதல் இடம் பெற்றுள்ளனர்.

## ஆனையூரில் திருவழிபாட்டுக் கருத்தமர்வு



ஆனைக்கோட்டை புனித அடைக்கல அன்னை ஆலய சிறப்புப் குழுக்களுக்கான “திருவழிபாடு” பற்றிய கருத்தரங்கு 14.03.2022 பங்கு தந்தை A.ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஒழுங்குப்படுத்தலில் அருட்தந்தை மில்பர் வாஸ் அடிகளாரால் நடத்தப்பட்டது.இக்கருத்தமர்வில் அனைத்துப் பக்திச் சபை உறுப்பினர்களும் பங்கு பற்றிப் பயன்பெற்றனர்

## மண்டைதீவு மாணவன் சாதனை



2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 19 மாணவர்கள் தோற்றியுள்ள நிலையில் இவர்களுள் 8 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத் துள்ளனர். இப்பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றியவர்களுள் நிசாந்தன் நிதர்சன் என்ற மாணவன் 183 புள்ளிகளைப்பெற்று தீவகவலயத்தில் முதல் இடத்தைப் பெற்று சாதனைபடைத்துள்ளார் . இவரது சாதனை பாடசாலைக்கும் தீவகவலயத்திற்கும் பெருமை தந்துள்ளது .

### சிறுவர்களை இறை விசுவாசத்தில்.......

(1ம் பக்கத்தொடர்ச்சி)

இப்பயிற்சி நெறியின் இறுதி நாள் சின்னம் சூட்டும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து திருப்பலி ஒப்புக்கொடுத்த மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இம்மனுவல் பெர்னான்டோ ஆண்டகை அவர்களே மேற்கண்ட வேண்டுகோளை ஊக்குவிப் பாளர்களிடம் விடுத்து நின்றார்.

யாழ்ப்பாண மறைமாவட்டத்தை சேர்ந்த 45 ஊக்குவிப்பாளர்கள் பங்கேற்ற இப் பயிற்சி நெறியில் கலந்துரையாடல், தியானங்கள், களப் பயிற்சிகள் என்பன அருட்பணியாளர்களினால் வழங்கப்பட்டிருந்தன.

இப்பயிற்சி நெறியினைத் திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குநர் பசிஸ் றொகான் அடிகளுடன் யாழ்மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி எஸ். ஏ. றொஷான் அடிகள் இணைந்து ஒழுங்கு செய்தார்கள்.

காவலன் கலசம்

# தற்காலப் பின்னணியில் மனித துன்பம்



## ஓர் விவிலியப் பார்வை .



அருட்சகோதரி ஞா.இ.சுபாஜினி (தி.கு)

**துன்பத்தின் போது நிமிர்ந்து நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.**

இவைகள் நிகழும் போது உங்கள் தலைகளை உயர்த்தி நிமிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில் உங்கள் மீட்பு நெருங்கி விட்டது. (லூக் 21:28) பேதுருவும் யோவானும் தேவாலய வாயிலில் பிச்சை கேட்டுக்கொண்டிருந்த கால் ஊனமுற்றவரைக் குணமாக்கியதை நினைவில் கொள். பேதுரு அவர்களைப் பார்த்து "நசரேத்தூர் இயேசுக் கிறிஸ்துவின் பெயரால்" (தி.ப 3:6) என்றார். பின்னர் அவனது வலக்கரத்தைப் பிடித்து அவன் எழுந்து நிற்க உதவி புரிந்தார். உன் போராட்டத்தில் துன்பத்தில் தலை நிமிர்ந்து நிற்கவும் அவற்றை நிமிர்ந்து நின்றவாறு எதிர் கொள்ளவும் உனக்கு இறைவன் ஆற்றலைத் தருவார்.

### உன் வலிகளோடு தங்கியிருக்க வேண்டும்

உன் துன்பத்தை உனதாக்கிக்கொள்

***"மெய்யாகவே அவர் தம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங் களைச் சுமந்து கொண்டார்" [எசா 53:4]***

இறைவன் உன் தனிமை உணர்வை வேண்டி நிற்பவரல்ல. உன் ஆழமான தேவையை நிரந்தரமாக பூர்த்தி செய்யும் விதமாக உன்னைத் தொடுவதற்கே இறைவன் விரும்புகின்றார். நீ உன் துன்பத்தோடு தங்கியிருப்பதும் அதனை அங்கே இருக்க அனுமதிக்கத் துணிச்சலைக் கொண்டிருப்பதுமே முக்கியமானது. நீ இப்போது அனுபவிக்கும் இத் துன்பமானது எங்கு உனக்குக் குணமாக்கல் அவசியமோ அந்த இடமாகிய இதயத்துடன் உன்னைத் தொடர்புற்றிருக்க வைப்பதை நோக்கமாகக் கொண்டது. அந்த இடத்தைத் தொடும் ஆற்றல் கொண்டிருந்தவர் விலைமதிப்பற்ற உன்முத்தை உனக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த காலத்தில் செய்தவை. தற்போது செய்து கொண்டிருப்பவை. இனிச் செய்வதற்கு நீ திட்டமிடுபவை, என்பவற்றோடு அந்த முத்தை ஒப்பிடும் போது அவை அனைத்தும் அர்த்தம் இழக்கவில்லை என்பது புரியப்படக் கூடிய ஒன்று. அந்த முத்து என்பது முழுமையாக அன்பு செய்யப்படுவதான அனுபவமே. நீ ஆழமான தனிமையை அனுபவிக்கும் போது அதிலிருந்து குணமடைவதற்காக எதையும் கைவிடத் தயாராக இருக்கின்றாய். அந்த வலியை எந்த மனிதராலும் குணமாக்க முடியாது. இறைவனின் குணமாக்கலை உனக்கு அளிப்பதற்கென மனிதர்கள் உன்னிடம் அனுப்பப்படுவார்கள். அவர்கள் நீ அனுபவிக்க விரும்புகின்ற அந்த ஆழமான சொந்தம் கொண்டாடும் உறவு உரிமையை உனக்கு அளிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அந்த உறவுரிமையே நீ செய்யும் அனைத்திற்கும் அர்த்தம் கொடுப்பதாக அமையும். கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள்" (1பேது 4:13) உன் வலியோடு தங்கியிருக்கத் துணிவு கொண்டிரு. அத்தோடு இறைவன் உனக்கு அளித்த வாக்குறுதியை நம்பு.உருவமற்ற கரடு முரடான பாறாங் கல்லின் உள்ளே அழகிய சிலையொன்று மறைந்திருப்பது போன்று உன் வாழ்வை வளப்படுத்த உன்னுள்ளே இறைவன் புதைத்துள்ள, விதைத்துள்ள விதை புத்துருப்பெற்று எழவேண்டும் என்பதே துன்பத்தின் இரகசியம். பாறை செதுக்கப்படவேண்டும், வேதனைகள் அனுபவித்தே ஆக வேண்டும். விடா முயற்சியோடு மனம்சோராது இறைவனின் உளியாகிய நிகழ்வுகள் மூலம் அவர் அனுமதிக்கும் நோவுகளுக்கு, அமைதியில் ஒத்துழைத்தல் இன்றியமையாதது. "எய்தவன் இருக்க அம்பை நோவது அவசியமற்றது.

உள்ளத் தூய்மையைக் கறைப்படுத்துவது, புதிய உருவைப் பாதிவழியில் நிறுத்தும் ஆபத்துக்கு இட்டுச் செல்வது.

### பாடுகள் இன்றி உயிர்ப்பு இல்லை

இயேசுவை கிறிஸ்துவாக மாற்றிய உயிர்ப்புக்கு ஆதாரமாக அமைவது அவரது பாடுகள். எனவே உயிர்ப்பை நாம் உணர வேண்டுமாயின் பாடுகள் தேவை. ஏனெனில் பாடுகள் இன்றி உயிர்ப்பு இல்லை. "நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" (யோவா 12:32) என்று தமது இறப்பு, உயிர்ப்பைக் குறித்து ஆண்டவர் கூறுவதுசிந்தனைக்குரியது, உயிர்ப்பை வற்புறுத்துகையில் சிலுவையை மறத்தலாகாது. உயிர்ப்பு சிலுவையை அழிக்கவில்லை, புனித பவுலின் போதகத்தில் இவ்வுண்மையை நன்கு அறிந்து கொள்ளலாம். கிறிஸ்து உயிர்க்கவில்லையென்றால் தமது போதகம் வீண் (கொரி 15:14) என்கின்றார்.

உயிர்ப்பின் ஒளியில் சிலுவையின் உண்மையை மறந்து விடக் கூடாது. இரண்டும் இணை பிரியாதவை. ஏனெனில் கிறிஸ்துவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் கொடுமுடியாய் அமைந்தவை, அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய நிகழ்ச்சிகளாகும். இறையியல் நோக்கில் இவை மூன்றின் விளைவும் ஒரே பயனைக் குறித்து நிற்கின்றது, அதாவது அவரது உயிர்ப்பின் மகிமை அவரது பாடுகளிலும் ஒளி வீசிற்று. எனவே பாடுகளுக்கு அர்த்தம் கொடுப்பது உயிர்ப்பென்றால் உயிர்ப்புக்கு உரமூட்டியது கிறிஸ்துவின் சிலுவை என்றால் அது மிகையாகாது. கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு நாமும் சாட்சிகளாக சான்று பகிர வேண்டும் என்றால் எம் அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் கஸ்டங்கள், துன்பங்கள் ஏமாற்றங்களைக் கண்டு மனச்சோர்வடைந்து விடாமல் இவை எம் வாழ்வைப் புடம்போட எமக்கு வாய்த்த சிலுவைகளென ஏற்றுக் கொள்வோம். அவ்வாறு செய்யின் அவமானச் சின்னமாகிய சிலுவையை அன்பின் சின்னமாக்கிய இயேசுக் கிறிஸ்துவின் வெற்றியில் நாமும் பங்குகொள்கின்றோம். எல்லாப் பிரச்சினைகளுக்கும் மூன்று தீர்வுகள் உள்ளன.

**1. ஏற்றுக் கொள்வது.**
**2. மாற்றிக் கொள்வது.**
**3. விட்டு விடுவது,**

ஏற்றுக் கொள்ளுங்கள், ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களை மாற்றிக் கொள்ளுங்கள், மாற்ற இயலாதவற்றை விட்டுத் தள்ளுங்கள். துன்பம் வரும் போது சிரிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் இடுக்கண் வரும் கால் நகுக" என வள்ளுவர் கூறுகின்றார். துன்பம் என்ற வட்டத்தை விடுத்து வெளியில் நின்று பார்க்கும் போது எம்மால் பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வு காண முடியும். வெள்ளம் போல் கரைகடந்து துன்பம் வந்தாலும் என்ன? இதுதானே வாழ்வின் இயல்பு, என எண்ணுவோம். சமநிலையோடு வாழக் கற்றுக்கொள்வோம். இணையத்தளங்களுக்கு அடிமையாகி, நாகரீகத்தைத் தொலைத்து, மனித நேயத்தைக் காற்றில் பறக்க விட்டு, கொள்ளை நோயாம் கொரோனாவின் பிடியில் சிக்கி மீள்வதற்கு வழிகள் பல தேடிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்திலே துன்பத்தில் துவண்டு போகாது நிமிர்ந்து நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும். வெட்ட வெளியில் நாலா புறமும் காற்றால் அலைக்களிக்கப்படும் மரமும் புயற் காற்றில் கரை சேர்ந்த ஓடமும் ஆற்று வெள்ளத்தில் உருட்டப்பட்ட துரும்பும் உளியில் அகப்பட்ட கல்லும் எவ்வாறு திடமும் புதுப்பொலிவும் பெறுகிறதோ, அது போல இக்காலத்துத் துன்பங்கள் மனிதனை மனிதனாக வாழக் கற்றுக் கொடுக்கின்றன.

எனவே, மனித துன்பம் விவிலியப் பார்வையில் நற்செய்தி மதிப்பீடுகளை நமதாக்கி பாஸ்கா மறை பொருளை வாழ, நம்பிக்கையும், புத்துயிரும் பெற்று மிளிர்விக்கும் அழைப்பேயாகும். ●

## இளையோர் காவியம்

தெய்வச் சிலைகள் அல்லாத
வேறு சிலைகளைக் கும்பிடுவது தான்
விக்கிரக ஆராதனை என்பது
ஒரு நூலில் எழுதப்பட்டிருந்த உண்மை

தெய்வச் சிலைகள்
தெய்வப் படங்களுக்கு முன்னால்...

ஞானம் உள்ளவர்கள் நிற்கும் போது
நன்மை தீமைகள் தெரிய வரும்

ஆழமான விசுவாசத்தின் தேடலுக்கு
கடவுள் கொடுக்கும் பரிசு ஞானம்

உன் விசுவாசம் கடுகாக இருந்தாலும்
உன் திறமைகள் கடவுளை
முட்டிவிட்ட சிறகுகள்

நீ இடிக்கப்படும்போது
இடிக்கப்படுகிறார்கள் இடிக்கிறவர்கள்

அடுத்தவர் துன்பதில்
ஆறியிருக்கும்போது
பாறி விழுகிறது வாழ்க்கை

தீமைகள் சாத்தான்களால்
புனரமைக்கப்பட்ட வீதிகள்
போகிறவர்களைக் காணலாம்
வாழ்க்கையைக் கொண்டு வருபவர்களைக்
காணமுடியாது

வளி மட்டும் அல்ல வழி
ஒளி இருப்பது தான் வழி
நீ போகிற வழி
நேர் வழி என்றால்
ஒளி

உயிரோவியன்

## வரவும் செலவும்!

கோடையில் வற்றி,
மழைக்காலத்தில் குளங்கள் நிரம்புகின்றன.
மரங்கள் இலை உதிர்த்து பின் தளிர் விடுகின்றன.
நிலங்களும் வறண்டு பின் பசுமை அடைகின்றன.
இயற்கையின் நியதியில்
நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருப்பது எதுவுமில்லை.
இறைவன் மனிதரையும் அப்படித்தான் வைக்கிறார்.
முதலில் வரவு என்றால் அடுத்தது செலவு,
முதற்கட்டம் வறுமை என்றால் அடுத்தது வளமை.
முன் இன்பம் என்றால் பின் வருவது துன்பம்.
இன்பமும், துன்பமும் ஒரு மாயாங்கமே.
இறைவனின் தராசில்
இரண்டு தட்டுகளும் ஏறி ஏறி இறங்குகின்றன.
ஏற்றம் என்பது இறைவன் வழங்கும் பரிசு என்றால்,
இறக்கம் என்பது அவரின் விளையாட்டு.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மக்கள் எவ்வாறு மீண்டெழுவது எனத் திணறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், என்ன செய்வது? எங்கு போவது எனக் குழம்பித் தவிக்காது. நிம்மதியிழந்து, தூக்கமின்றிச் சஞ்சலமடையாமல், இறைவன் ஒருவரே இதற்குரிய விடையைத் தரவல்லவர்.
**'முடியாத காரியங்களை முழந்தாளிட்டு நிறைவேற்றலாம்'** என்பர்
இறைவனைப் பற்றிப் பிடிப்போம்.
எமக்காகத் தரப்பட்டுள்ள இத் தவக்காலத்தில்
நம்பிக்கையுடன் வீழ்ச்சியில் கலங்காது,
எழுச்சியில் மயங்காது எல்லாம் இறைவன் செயலென்று,
வரவையும் செலவையும் சரிசமமாய்
ஏற்று வாழ்ந்தால் ஏமாற்றமில்லை.
புரிந்து கொண்டால் நிமிர்ந்து வாழலாம்.

வாழ்க்கை ஒரு நாள் வளமாகும்
வானம் கூட வசமாகும்
புதிய திறமைகள் வெளிப்படும்
பழைய விருப்பங்கள் நிறைவேறும்
இனிய உறவுகள் மலர்ந்துவிடும்
உரசல்கள் தீர்ந்து உறவுகள் வளர
மாற்றம் ஒன்றே மாறாதது
ஏனையவை ஒரு நொடியில் மாற்றப்படும்
அன்பராம் இயேசுக்கிறிஸ்துவின் அருளினால்
செபிப்போம்... தினம் செபிப்போம்....

# காவலன் கலசம்

# என் கேள்விக்கென்ன பதில்!




*(மதன், மன்னார்)*

**கேள்வி: அடிக்கடி களவுகளும் தங்க நகை அறுப்புக்களும் இடம் பெறுகின்றன. இவற்றைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யலாம்?**

**ப:** மதன், இந்நாட்களில் இவ்வாறு தங்க நகை அறுப்புக்கள் நடைபெறுகின்றதென்று தெரிந்தும் நகைகளைப் போட்டுக்கொண்டு நாட்டியமாடி நகர்வலம் வரும் நங்கையரை என்ன செய்யலாம் என்று எனக்கும் தெரியவில்லை! இப்போது உழைப்பு இல்லை, வருமானம் இல்லை! அத்துடன் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள சூழலில் இவ்வாறான நிலை தொடர்கின்றது. எனவே, நாங்கள்தான் 'ஜாக்கிரதை'யாக நடந்துகொள்ள வேண்டும். 'துட்டனைக் கண்டால் தூர விலகு' என்று நம் முன்னோர் சொல்லித்தந்திருக்கின்றார்கள் அல்லவா! நாங்கள் கடைப்பிடிக்கின்றோமா? இல்லையே!

*(ராஜன், யாழ்ப்பாணம்)*

**கே: 2019 ஏப்ரல் ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் ஒரு பெரும் அரசியல் சதிவலையின் ஒரு பகுதி எனவும், மூன்று ஆண்டுகள் ஆகியும் இக்குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றும், அதனால் கடந்த ஆண்டு ஐ. நா. மனித உரிமைக் கவுன்சலினால் தொடங்கப்பட்ட சாட்சி சேகரிப்பைத் தொடரும் படியாகவும், அதனூடாக நீதி கிடைக்கவேண்டும் என்றும் ஐ. நா. மனித உரிமைக் கவுன்சிலையும் அதன் உறுப்பு நாடுகளையும் கேட்டிருக்கின்றார் கொழும்புப் பேராயர் கார்டினல் மல்கம் றஞ்சித் ஆண்டகை! நல்ல விடயம்தான்! கேட்கவேண்டிய கேள்வி! ஆனால், தன் மக்களுக்காகத் துடிக்கும் பேராயர் முப்பது, நாற்பது ஆண்டுகளாக நீதி மறுக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் கண்ணீர் சிந்தும் உறவுகளின் நீதிக்கான வேண்டுகோள் பற்றி இதுவரையில் பேராயர் கரிசனை கொள்ளாது இருப்பது சரியா?**

**ப:** நான் என்னத்தச் சொல்ல ராஜன்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: நாடு போகின்ற போக்கை பார்த்தால் பொருளாதார ரீதியில் நாட்டினை மீட்டெடுப்பதற்கு வழியில்லை போல தெரிகின்றது! என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** ஆனந்தன், வழி இருக்கின்றது. வழியைப் பார்த்து நடப்பதற்கு நம் தலைவர்களுக்கு விழி வேண்டுமே!

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: 'கூட்டொருங்கியக்கம்' முடிந்துவிட்டதா?**

**ப:** சும்மா போங்க யோசப்! பகிடிக்கு ஒரு அளவுகணக்கு வேண்டாமா!? பயணித்துக்கொண்டு இருக்கின்றோம் யோசப்! இணைந்து கொள்ளுங்கள்.

*(சசி, யாழ்ப்பாணம்)*

**கே: அத்தியாவசியப் பொருட்களின் விலை ஆதாளபாதாளத்திற்குச் செல்லும் நிலையில் அவற்றின் தட்டுப்பாடும் அதிகரித்துச் செல்கின்றது! இந்நிலையில் எப்படி வாழலாம் என்று ஆலோசனை கூறுவீர்களா?**

**ப:** சசி, 'காஸ்'க்கு வரிசையில் நிற்பதை விட்டுவிட்டு உங்களைச் சுற்றியிருக்கின்ற காணியில் காணப்படும் விறகுகளை சேகரித்து சமையலை ஆரம்பியுங்கள். வீட்டில் உள்ள காணியில் அல்லது சிறிய உரப்பைகளில் (பாக்குகள்) சிறிய வீட்டுத் தோட்டத்தை உடனடியாகத் தொடங்குங்கள். வீணான பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஆடம்பர வாழ்க்கை முறையை விட்டுவிட்டு அத்தியாவசியமானவற்யோடு வாழப் பழகுங்கள். இக்கடினமான காலத்தில் உங்கள் வாழ்க்கைப் பாரத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்!

---

**அர்த்தமுள்ள ஆன்மீகம் 09**

# நமது உள்ளங்களைக் கோவிலாக்கி...

மிகப் பெரிய பயணம் என்பது நமக்குள்ளே நாம் நடத்தும் பயணமே. வெண்ணிலவில் இன்று மனிதன் பல நாள் வாழ்கிறார். வீனஸ், செவ்வாய் கோள்களை விரிவாக ஆராய்கிறார். விண்வெளியை ஆராய விருப்பம் கொண்ட மனிதர், தன் மனவெளியை மட்டும் ஆராய மறுக்கிறார். மன வெளியில் மறைந்துள்ள மகத்தான ஆற்றல்களின் மதிப்பும் அருமையும் அவருக்குத் தெரிவதில்லை.

**உங்கள் உள் அறைக்குள் செல்லுங்கள்:**

எவ்வாறு இறைவேண்டல் செய்யவேண்டும் என்று இயேசு தன் சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தபோது, "நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்" (மத். 6:6) என்று கூறுகின்றார். உள்ளறை என்கிறாரே. எந்த உள்ளறை? மனத்தின் உள்ளறை! மன்றாட்டு அங்கே மலரட்டும். மனத்தின் உள்ளே உள்ளே உள்ளே நாம் உட்புகுந்து, மலர்ந்த முகத்தோடு அங்கே நமக்காகக் காத்திருக்கும் மன்னவனின் கால்களில் மண்டியிட வேண்டும். வாழ்க்கைப் படகின் நங்கூரத்தை நாமெல்லாம் வலிமையாக இறைவன்மீதே பிணைத்திருப்பதால், வந்து மோதும் துன்ப அலைகள் படகைக் கவிழ்ப்பதில்லை.

**ஆரம்பம்:**

இவ்வாறான உள்ளார்ந்த பயணம் அல்லது ஆன்மீகப் பயணம் பெரும்பாலும் ஒரு நோயுடன் அல்லது உள அதிர்ச்சியுடன் ஆரம்பமாகிறது என்று பலர் கூறுவர். அதாவது இப்பயணம் நெருக்கடியால் தூண்டப்பட்டது என்பர். நோய், இழப்பு, தனிமை என்பவை எம்மை இவற்றிலிருந்து விடுதலை பெறத் தூண்டுகிறது. நீங்கள் எதைத் தேடுகிறீர்கள் என்று கேட்டால், மகிழ்ச்சி, உடல்நலம், அமைதி என்று ஒரு மேலோட்டமான, தெளிவற்ற பதிலைக் கூறுவாஉகள். ஏன் நமக்கு இவை நடைபெறுகின்றன என்று கேட்கும்போது பெரும்பாலானவர்கள் தம் ஆன்மீக வாழ்வின் குறைபாட்டினால் என்று சொல்லாமல் சொல்லுவர்.

**உள்ளார்ந்த வெளி:**

இந்த உள்ளார்ந்த வெளிபற்றி இயேசு குறிப்பிடும்போது "இறையாட்சி உங்கள் நடுவே செயற்படுகிறது" (லூக் 17:24) என்றும், "நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள்" (மத் 6:6) என்றும் கூறுகிறார். தொடக்ககாலத் திரு அவை இந்த "உள் அறை" என்றால் என்ன என்று நன்கு உணர்ந்திருந்தது. "உன் உள் அறைக்குள் சென்று அங்கே அமர்ந்துகொள். அந்த உள் அறை அனைத்தையும் உனக்குக் கற்றுத்தரும்" என்று கூறுகி றது தொடக்ககாலத் திரு அவை மரபு ஒன்று. உள்ளமே இந்த

**உள்ளார்ந்த வெளி:**

விவிலியமும் தொடக்க காலத் திரு அவை திருத்தந்தையர்களும் இந்த உள்ளார்ந்த வெளி உள்ளமே என்பதை உணர்ந்தனர். எமது உள்ளம்தான் இறைவன் உறையும் இடம் நாம் இறைவனைச் சந்திக்கும் ஆலயம். இறைவன் நமக்கு வெளியிலேயே இருக்கிறார் என்று பெரும்பாலும் நாம் நினைக்கிறோம் வேண்டுகிறோம். எமது ஆன்மீகப் பயணம் எமது உள்ளத்



அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

துள் நாம் நடத்தும் பயணம். மத் 5:8 ல் இயேசு "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" என்று கூறுகிறார். இதைத்தான் இறைவாக்கினர் யோவேல் 2:13ல் "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ளவேண்டாம்,

(தொடரும்...)

---

# தொடரும் 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

**நம்பிக்கை அறிக்கையின் ஐந்தாம் பிரிவு**

**88. நம்பிக்கை அறிக்கையின் ஐந்தாம் பிரிவு என்ன?**

பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.

**89. பாதாளத்தில் இறங்கி என்பதன் பொருள் என்ன?**

பாதாளத்தில் இறங்கி என்பதன் பொருள் கிறிஸ்து உயிர் நீத்தவுடன் அவருடைய தூய ஆன்மா லிம்போ (Limbo) என அழைக்கப்படுகின்ற பாதாளத்தின் பகுதிக்கு இறங்கிச் சென்றது என்பதைக் குறித்துக் காட்டுகிறது.

**90. லிம்போ என்பதன் பொருள் என்ன?**

லிம்போ என்பதன் பொருள் பின்வருமாறு:

கிறிஸ்துவிற்கு முன்பு வாழ்ந்து இறந்த நேர்மையாளர்களுடைய ஆன்மாக்கள் தங்கியிருந்த இடம்.

திருமுழுக்குப் பெறாது இறக்கும் குழந்தைகளின் ஆன்மாக்கள் தங்கியிருக்கும் இடம்,

**91. ஏன் இவ்வாறான நேர்மையாளர்களின் ஆன்மாக்கள் லிம்போ என்ற இடத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தன?**

நேர்மையாளர்களின் ஆன்மாக்கள் லிம்போ என்ற இடத்தில் தங்க வைக்கப்பட்டிருந்ததற்கான காரணம் கிறிஸ்து விண்ணுலகத்தின் கதவுகளைத் திறந்து வைப்பதற்கு முன்னதாக விண்ணுலக இராட்சியத்திற்கு இவர்களால் போக முடியாதிருந்தது.

**92. மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதன் பொருள் யாது?**

மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதன் பொருள் கிறிஸ்து இறந்து அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாளில் மீண்டும் உயிர்த்துக் கொண்டார் என்பதாகும்.

**93. கிறிஸ்து இறந்தோரிடமிருந்து எப்போது உயிர்த் தெழுந்தார்?**

உயிர்த்த ஞாயிறு தினத்தில் கிறிஸ்து இறந்தோரிட மிருந்து உயிர்த்தெழுந்தார்.

**நம்பிக்கை அறிக்கையின் ஆறாம் பிரிவு**

**94.நம்பிக்கை அறிக்கையின் ஆறாம் பிரிவு என்ன?**

விண்ணகம் சென்று எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்.

**95. விண்ணகம் சென்று என்பதன் பொருள் யாது?**

விண்ணகம் சென்று என்பதன் பொருள் நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்த நாற்பதாம் நாளாகிய விண்ணேற்பு நாளில் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுலகில் நுழைந்தார் என்பதாகும்.

**96. எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனின் வலப் பக்கத்தில் வீற்றிருக்கின்றார் என்பதன் பொருள் என்ன?**

எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார் என்று கூறும்போது தந்தையாம் இறைவன் கைகளைக் கொண்டிருக்கிறார் என்பது பொருள் அல்ல, ஏனெனில் அவர் அரூபியாய் இருக்கின்றார். ஆனால் இங்கு கிறிஸ்து இறைவனாய் இருப்பதால் தந்தைக்குச் சமமானவராக அதே வல்லமையோடு இருக்கின்றார். அத்தோடு அவர் மனிதனாகவும் இருப்பதால் விண்ணுலகில் மிக உயர்ந்த இடத்தில் இருக்கின்றார்.

(தொடரும்...)

# காவலன் கலசம்

**கரைவையூர்ச் செல்வம்**




### எனது சிந்தனை

அமலமரித் தியாகிகள் இந்த நாட்டில் கால்பதித்து பணிப் பணயம் மேற்கொண்டு இவ்வாண்டுடன் 175 ஆவது அகவையைத் தொட்டு விட்டார்கள். இதையிட்டு சென்ற கட்டுரைகளில் எழுதியுள்ளேன்.

இக்காலகட்டத்தில் அவர்கள் செய்ய வேண்டியது என்ன? முதலில், ஓர் மீளாய்வு செய்தல் அவசியம். பொதுவாக துறவற சபைகள் மீளாய்வு செய்வது குறைவு. இந்த 175 ஆண்டுகளாக அமலமரித் தியாகிகளின் பணிப் பயணத்தில் நடந்தவை எவை? ஆரோக்கியமற்றவை எவை? எப்படி நடந்தவை? பணியில் ஏற்பட்ட திருப்திகள் எவை? அதிருப்திகள் எவை? எல்லாவற்றிலுமிருந்து நாம் கற்றுக் கொண்டவை எவை? யார் யாருக்கெல்லாம் நன்றி சொல்ல வேண்டும்?

### விமர்சனம்

சுயவிமர்சனம் செய்வது அவசியம். ஒருவர் வளர, ஒரு நிறுவனம் வளர இந்த சுய விமர்சனம் தேவை. சுயவிமர்சனம் செய்யக்கூடியவர்கள் ஆரோக்கியமாக வாழ வழி வகுப்பார்கள். அதேவேளை மற்றவர்களுடைய விமர்சனங்களுக்கு திறந்த மனமுடையவர்களாக இருப்பார்கள். சில விமர்சனங்கள் நொந்தாலும், அந்த நோவுனூடாக வளர வாய்ப்பைத் தேடுவார்கள்.

சுயவிமர்சனம் எவ்வளவு தேவையோ அதே போன்று ஒரு குழுமத்திற்கு, ஒரு மாகாணத்திற்கு, ஓர் இனத்திற்கு, ஒரு நாட்டுக்கு சுயவிமர்சனம் தேவை. அவை வளரும். அதேவேளை எங்ஙனம் ஒரு தனிநபர் மற்றவர்களடைய விமர்சனத்திற்கு மனந்திறந்திருப்பார்களோ, அதேபோன்று ஒரு நிறுவனமும் மனந்திறந்திருக்கும்.

துறவற சபைகளும் சரி, மறைமாவட்டங்களும் சரி இப்படிப்பட்ட விமர்சனத்தை உள்வாங்கினால் அவை வளரும். விமர்சனங்களை விரும்பாதவர்கள் தன்னிச்சையாக வாழவும், காலப்போக்கில் விமர்சிப்பவர்களை அடக்கியும், ஏன் கொன்றும் போடுவார்கள். இந்தக் கட்டத்திற்குச் சென்றவர்களின் இயல்பான அடுத்தபடி சர்வாதிகாரம். எங்கள் நாட்டில் தெளிவாக இதைப் பார்க்கின்றோம். இன்று புட்டினின் குருட்டுத்தனமான சர்வாதிகாரம் எத்தனை மக்களைக் கொல்கின்றது. கோடிக்கணக்கான மக்களை நாட்டைவிட்டுத் துரத்துகின்றது. இருப்பிடங்களை அழிக்கின்றது. நஞ்சுக் காற்றைப் பரப்புகிறது.

### பயந்தவர்கள்

பயந்தவர்கள், ஓரளவாவது பாதுகாப்பின்மையுடையவர்கள் (insecure) ஒளிவு, மறைவு உள்ளவர்கள், தன்நம்பிக்கையற்றவர்கள், பொய்யர்கள், போலியானவர்கள், அடையாளமற்றவர்கள், இருப்பதை வளர்க்க முடியாது. இருப்பதையே தக்கவைப்பவர்கள் இவர்கள் அனைவருமே விமர்சனத்தை கிஞ்சித்தும் விரும்பாதவர்கள். விமர்சனம் செய்வோரை ஒதுக்குவார்கள், இறுதியில் ஒழிப்பார்கள்.

நல்ல பண்புள்ள உண்மையான விமர்சனம் செய்யும் ஊடகவியலாளர் வரலாற்றில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். உலக நாடுகளில் நடந்தவை. எங்கள் நாடு விதிவிலக்கல்ல.

இன்று ஓய்வு பெற்ற முன்னாள் கண்டி மறைமாவட்ட ஆயர் வியன்னி அவர்கள் ஒரு முறை என்னிடம் சொன்னார்: “செல்வம், திருச்சபையில் ஜனநாயகம் இல்லை” - மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை. விமர்சனங்களுக்கு இடமில்லை என்று சொல்லாமல் சொன்னார். மாற்றுக் கருத்துக் கொண்ட சிறந்த இறையியலாளர் திருஅவையில் ஓரங்கட்டப்பட்ட வரலாறு நீண்ட காலமாகவே உண்டு. விமர்சிப்பவர்களை ஓரங்கட்டும் துறவற சபைகள் இன்னமும் உண்டு. அவர்களிடம் நல்ல கருத்துக்கள், ஆரோக்கியமான ஆக்கபூர்வமான அர்த்தமுள்ள கருத்துக்கள் இருப்பினும், அவர்கள் தலைமைப் பீடங்களுக்குச் சவாலாக அமைவார்களானால் ஓரங்கட்டப்படுவார்கள்: இன்றும் ஓரங்கட்டப்படுகிறார்கள்.

இயேசு தனது காலத்தில் இருந்த (வாழ்ந்த அல்ல) யூதமதத்தை வெகுவாக விமர்சித்த பதிவுகள் நான்கு நற்செய்திகளிலும் பரவலாக உண்டு.

### இடைக்காலம்

இந்த யூபிலி ஆண்டை ஓர் இடைக்காலமாகப் பார்க்க வேண்டியது அவசியம். இடைக்காலத்தில் மூன்று விடயங்கள் உண்டு. முதலாவது: ஒரு காலம் - யுகம் முடிகிறது. நன்றி நவிலல், இழப்புகளுக்கு வருந்துதல், இரண்டாவது: எதிர்காலம் இன்னமும் தோன்றவில்லை. ஓர் எதிர்பார்ப்பு, ஒரு நிச்சயமற்றதன்மை. மூன்றாவது: எதிர்காலத்தைத் தழுவுதல், ஆரோக்கியமான நிலை, தவளைப் பாய்ச்சல் நல்லதல்ல, ஆரோக்கியமற்றது.

தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஒரு பருவத்திலிருந்து இன்னோர் பருவத்துக்குப் பயணிக்கும் பொழுது ஓர் இடைக்காலம் உண்டு. இதையிட்டுப் பொதுவாக நாம் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால், இடைக்காலப் பிரச்சினைகளைத் தகுந்த முறையில் சந்தித்து, அவற்றிலிருந்து விடுபட்டு அடுத்த பராயத்தைத் தழுவுவது ஆரோக்கியமானது. அன்றேல், முதல் பருவத்துப் பிரச்சினைகளை நாம் காவிக் கொண்டு அடுத்த பராயத்தை நாடும்பொழுது நாம் காவிச் செல்லும் பிரச்சினைகள் அடுத்த பராயத்தைப் பாதிக்கும். வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும். உதாரணமாக-: திருமண முறிவு ஏற்பட்டால், இடைக்காலத்தை நல்ல முறையில் அணுகவில்லையென்றால், மறுமணம் செய்யும் பொழுது முதல் திருமணப் பிரச்சினைகளை மறுமணத்திற்கு எடுத்துச் செல்வதை நாம் அவதானித்துள்ளோம். இடைக்காலம் பற்றி எழுதுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அதனால் அது முக்கியமல்ல என்பது தவறான முடிவாகும். ஆகவே அதைக் கோடிட்டுக் காட்டவேண்டியது அவசியம்.

### மூடிய கதவுகள்

யாழ் மறைமாவட்டத்திலும், மன்னார் மறைமாவட்டத்திலும், கொழும்பு மறைமாவட்டத்திலும் அமலமரித் தியாகிகளின் பணி இனியும் தேவைப்படமாட்டாது. இது கசப்பாக இருப்பினும், யதார்த்தமானது. பலவேளைகளில் யதார்த்தத்தில் வாழ்வதைவிட மாயையில் வாழ்வது இலகுவாக இருக்கலாம். ஆனால், நன்மையாக இருக்காது. ஒரு சில காலத்திற்கு காலி, இரத்தினபுரி மறைமாவட்டங்களில் பணிபுரிய அமலமரித் தியாகிகள் அழைக்கப்படலாம். அந்த அழைப்பு நீடிக்காது. ஆகவே, யாழ் மாகாண அமலமரித் தியாகிகளும், கொழும்பு மாகாண அமலமரித் தியாகிகளும் ஒன்றாக வந்து, தூர நோக்கோடும், உண்மைத் தன்மையோடும், வெளிப்படைத் தன்மையோடும், துணிவோடும் அமலமரித் தியாகிகளின் சிறப்புகளில் ஒன்றான “எதற்கும் தயார்” என்ற உறுதியோடும் எதிர்காலத்தை நோக்குவது அவசியம். அமலமரித் தியாகிகள் புது நிலங்களையும், புதுக் களங்களையும் தேடவேண்டும். களங்கள் என்று நான் இங்கு குறிப்பிடுவது புதிய பணிகள். இன்றைய மக்களின் தேவைகள் எவை? மறைமாவட்டங்களுக்கு அப்பாலும் நாம் தேடலாம். மதத்திற்கு அப்பாலும் தேடலாம். தேடவேண்டும். புதிய நிலங்களுக்கும், புதிய களங்களுக்கும் செல்வது அமலமரித் தியாகிகளின் சிறப்பில் ஒன்று. இது அவர்களுக்குப் புதிதல்லவே!

### “கரிசம்” - “அருங்கொடை”

கரிசம் என்ற சொல் கரிஸ்மா (charisma) என்ற சொல்லில் இருந்து வந்திருக்க வேண்டும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னரே துறவற சபைகள் கரி சம் என்ற சொல்லைப் பரவலாக, சிலவேளைகளில் மலிவாகவும் பயன்படுத்தினர்: பயன்படுத்துகின்றனர். இதில் பலருக்குஒரு விளக்கக் குறைவும் உண்டு. துறவற சபைகளை அடையாளப்படுத்துவதற்கும் இச் சொல்லைப் பயன்படுத்துவோர் உண்டு. ஆனால், அதில் குழப்பங்கள் உண்டு. உதாரணம்- “வறியோர்க்கு நற்செய்தி நவிலல்” - எங்கள் கரிசம் என்பார்கள் சிலர். ஆனால், அதேநோக்கோடு பணிபுரியும் துறவற சபைகள் பல உண்டு. “கல்விப் பணி எங்கள் பணி” என்று சொல்வோர் வேறு சிலர். ஆனால் அதேபணியில் ஈடுபடும் துறவற சபைகள் பல. இதில் இன்னோர் கேள்வியும் எழுகின்றது. பணியை வைத்தா சபையை அடையாளப்படுத்துகிறீர்கள்? அது மலிவானது.

“கரிசம்” என்ற சொல்லை, “அருட்கொடை” என்று பலர் மொழிபெயர்த்துள்ளார்கள். இந்த “அருட்கொடை” என்ற சொற்றொடர் எங்கிருந்து வந்தது?

### திருமுகங்கள்

பவுல் திருமுகங்கள் எழுதுவதில் வல்லவர். அவர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிட்டுள்ளார்.. “...நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக் கேற்ப வெவ்வேறு அருட்கொடைகளைப் பெற்றுள்ளோம். இறைவாக்குரைக்கும் கொடையை நாம் பெற்றிருந்தால் நாம் கொண்ட நம்பிக்கைக்கு ஏற்றவாறு அதைப் பயன்படுத்த வேண்டும். தொண்டாற்றும் கொடையை நாம் பெற்றிருந்தால் அதைக் தொண்டு புரிவதற்குப் பயன்படுத்த வேண்டும். கற்றுக் கொடுப்போர் கற்றுக் கொடுப்பதிலும், ஊக்கமூட்டுவோர் ஊக்கம் தருவதிலும், நமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயற்படுத்துவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முக மலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் நாம் பெற்ற அருட்கொடைகளைப் பயன்படுத்த வேண்டும் (12:6-8).

இவ்விடத்தே சில வினாக்கள் எழுகின்றன. முதலாவது: பவுலின் பட்டியல். அவர் பட்டியல் இட்ட பணிகளுடன் முடிவுற்றதா? மருத்துவம் ஒரு கொடை அல்லவா? நீதி வழங்குவது ஒரு கொடை இல்லையா? கமம் செய்வது ஒரு கொடை இல்லையா? உணவு தயாரிப்பது ஒரு கொடை இல்லையா? சுருக்கமாகக் கூறின், பணிகள் எல்லாம் கொடைகள் தானே!

இரண்டாவது : கற்றுக் கொடுப்போர் ஊக்கமூட்டுவோராகவும் இருக்க முடியாதா? கல்வியில் ஈடுபடுவோர் தலைமைதாங்குவோராகவும் இருக்க முடியாதா? அதாவது ஒருவர் இரண்டோ மூன்று கொடைகளைப் பெற்றுப் பணிகள் செய்து வாழ முடியாதா? அவ்வாறு வாழ்வோரைப் பார்க்கின்றேமே. பவுலின் பட்டியல் பல்வேறு பணிகளைச் சுட்டிக் காட்டுகின்றது. இவற்றை வைத்து “கரிசம்” பேச முடியுமா? இவற்றை வைத்து துறவற சபைகள் தங்கள் தங்கள் சபைகளை அடையாளம் காட்ட முடியுமா?

பணிகளை வைத்து அடையாளம் காட்டுவோர் அந்த அடையாளத்தை உடும்புப் பிடியாகப் பிடித்திருப்போர் பவுல் கொரிந்திய மக்களுக்கு எழுதிய முதலாவது திருமுகத்தைப் படித்து, சிந்தித்து, பவுலின் செய்தியை உள்வாங்கி வாழ்வது அர்த்தமுள்ளதாக இருக்கும் என்பது எனது எண்ணம்.

“அருட்கொடைகள் பலவகையுண்டு, ஆனால், தூய ஆவியார் ஒருவரே. திருத்தொண்டுகளும் பலவகையுண்டு, ஆனால், ஆண்டவர் ஒருவரே. செயற்பாடுகள் பலவகையுண்டு: ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயற்படுத்துபவர். பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகின்றது (12:4-7). பின்னர் பவுல் தனது பட்டியலை எழுதுகிறார். பவுலின் நோக்கு மிக்க ஆரோக்கியமுடையது.

### “கரிசம்” பிரிக்கின்றதா?

இன்று, ஒன்றுபட்டு இயங்க, பணிபுரிய வேண்டிய துறவற சபைகள், புரியாத ஒரு “கரிசம்” சொல்லிப் பிரிந்து வாழ்வது கிறிஸ்துவுக்குச் சாட்சியமா? அன்றேல் தன்னைக் கொண்டு தற்பெருமை கொள்ளும் எதிரிடையான - முரணான சாட்சியமா? துறவற சபைகள் நேர்மையோடும் உண்மைத் தன்மையோடும் சிந்திக்க வேண்டிய நேரமிது. “கரிசம்” என்பது பற்றி அருள்செல்வி சந்திரா ஸ்னைடர் மிகத் தெளிவாக இன்றைய விஞ்ஞான வழி நின்று, உருவாக்கத்தோடு இணைந்து, ஒரு சபையின் வரலாற்றுப் பார்வையில் தன்னுடைய நூல்களில் எழுதியுள்ளார்.

1) Finding the Treasure, 2000, பக். 282-358
2) Selling All, 2001, பக். 74-76
3) Buying the Field, 2013, பக். 497-503

சந்திரா ஸ்னைடர் துறவறத்தை ஒரு கறிஸ்மற்றிக் வாழ்க்கை முறை என்றெழுதினார். அந்த வாழ்க்கையில் தேக்கம் இருக்க முடியாது. ஒரு தேடலில் உள்ள வளர்ச்சியுடன் வாழும் வாழ்வு. “கரிசமும்” வளரும் - என்ற தொனியில் அவர் எழுதியுள்ளார். இப்படிப்பட்ட ஒரு துறவறத்திற்கு ஆள் சேர்ப்பது முறையா? யூபிலிகள் கொண்டாடும் துறவற சபைகள், துறவறம் இன்று இருக்கும் நிலையில் இருந்து ஒரு பாரிய மாற்றத்தைக் காண உழைக்கவேண்டும். சந்திரா ஸ்னைடர் எழுதிய மேற்கூறிய மூன்று பெரிய ஆய்வு ஏடுகளும் பின்னணியில் நின்று உதவும்.

“கரிசம்” பேசும் துறவிகள் இந்நூல்களைப் படித்துத் தெளிவு பெறுவது அவசியம். இது எனது எண்ணம். எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்.

*(வளரும்..)*

# காவலன் கலசம்

# புதுப் பயணம்

**எ**ந்த ஒரு மனிதனையும் திருத்த முடியாதவன் என்றோ எந்த ஒரு சூழலையும் திருத்தி அமைக்க முடியாது என்றோ நாம் ஒதுங்குவது தவறு. ஒவ்வொரு மனிதனும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை, பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அனுபவித்துக் கொண்டிருப்பான். ஏக்கம், எதிர்பார்ப்பு, ஏமாற்றம், தாகம், தன்னலம், தவிப்பு, தடுமாறல், இயலாமை, தீமைசார் வேட்கை, இறுமாப்பு போன்ற உணர்தாக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பான். எனினும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் சில அடிப்படைக் கூறுகள் பொதுவாய் இருப்பதைக் காணலாம். அவற்றை இனம் கண்டு அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளை உய்த்தறிதல் அவசியம்.

இயேசுவின் வழியில் இறைவார்த்தையின் ஒளியில், தூய ஆவியின் துணையோடு, இறைசார்புடையவனாய், இதய அன்புடையவனாய், நல்லவை செய்வதில் வல்லவனாய், நான் என்னை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். தவறான பாதையில் செல்லுகின்ற பயணத்தை மாற்றியமைக்க நான் தீவிரமாகச் செயற்பட வேண்டும். மகிழ்ச்சியான வாழ்வுக்குத் தடையாய் இருப்பனவற்றை நான் முறியடிக்க வேண்டும்.



*"யாரேனும் தாகமாய் இருந்தால்*
*என்னிடம் வரட்டும்:*
*என்னில் விசுவாசம் கொள்பவன் குடிக்கட்டும்:*
*அவனுடைய உள்ளத்திலிருந்து உயிருள்ள*
*நீர் ஆறாய்ப் பெருக்கெடுத்தோடும்"*

என்கிறார் ஆண்டவர் யேசுக்கிறிஸ்து (யோவான்: 7:37-39).

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)**

### புதுவாழ்விற்கான படிமுறைகள்

1. எனக்கு உதவி கடவுளிடமிருந்து வருகின்றது என்பதை உணர்தல்.
2. என்னை இறைவனுக்கு அர்ப்பணமாக்குதல்.
3. என் வாழ்வை நான் உற்று நோக்குதல்.
4. எனது வாழ்வு மாற்றியமைக்கப்படல்.

### 1. எனக்கு உதவி கடவுளிடமிருந்து வருகிறது என்பதை உணருதல்

எனது பாவச்சார்புகள், துன்பங்கள், கவலைகள், பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு எனக்கு உதவி தேவைப்படுகின்றது. நாளாந்த சாதாரண செயற்பாடுகளில்கூட பிறரின் உதவி அடிக்கடி தேவைப்படுகிறது என்பதை உணர்கிறேன். பயணம் செய்யும்பொழுது சாரதி வாகனம் ஓட்டத் தெரிந்தவராகவும் குடிவெறி போதைக்கு உள்ளாகாதவராகவும் இருக்க வேண்டிய தேவையை உணர்கின்றார். தவறுதலாக கிணற்றுக்குள் விழுந்ததும் 'காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று ஓலமிடுவது இல்லையா? விழுந்து கிடக்கும்பொழுது தூக்கி விடப்படுவதற்குப் பிறரது உதவியை நாடுவதில்லையா? பாவத்திலிருந்தும் பல்வேறுபட்ட பாவ நாட்டத்திலிருந்தும் நான் விடுதலையடை வதற்கு இறைவனின் உதவி மிகவும் தேவையானது என்பதை உணர்கின்றேன்.

ஜெரிக்கோ வழியோரத்தில் உட்கார்ந்திருந்த குருடர் இருவர் யேசுவிடம் உதவி கேட்டுக் கூவினர். கூட்டம் அவர்களையும் பேசாதிருக்கும்படி அதட்டியபொழுது அவர்கள் அதிகமாகக் கூவினர்: "ஆண்டவரே! தாவீதின் மகனே, எம்மேல் இரக்கம் வையும்"

*(மத்தேயு 20:30).*

அவர்கள் தாம் பார்வை பெறுவதற்கு இயேசுவின் உதவி தேவை என்பதை உணர்ந்த தால்தான் அவர்கள் பேசாதிருக்கும்படி அதட்டப்பட்டபொழுதும் அதிகமாகக் கூவினர். நான் சாதாரண குருடரைப் போல அடிக்கடி காணப் படுகின்றேன். எனது பாவப் பழக்கங்களிலிருந்து விடுபடமுடியாமல் அவதிப்படுகின்றேன். எனது அகக் கண்கள் இன்னும் குருடாக இருப்பதை உணர்கின்றேன். எனது சொந்த சக்தியினால், பலத்தினால் பார்வை பெறமுடியாது என்பதை உணர்கின்றேன். எனது இந்த நிலை மாற்றிய மைக்கப்படுவதற்கு எனது மனோபாங்கு மாற்றப் படவேண்டும். எனக்கு உதவி கடவுளிடமிருந்தே வருகிறது என்பதை உணர்ந்து, கடவுளால் நான் தொடப்பட வேண்டும்.

**"நானோ துயர்மிக்கவன். ஏழை**
**எனக்குத் துணை செய்யும்.**
**எனக்குத் துணைசெய்பவரும்**
**விடுதலையளிப்பவரும் நீரே.**
**ஆண்டவரே, தாமதியாதேயும்"**
(திருப்பாடல் 69:5).

### 2. என்னை இறைவனுக்கு அர்ப்பணமாக்குதல்

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும் இறைவனில் மகிழ்ந்திருக்க நான் மட்டும் ஏன் அவரில் இன்பம் காணமுடியாதவனாய் இருக்கின்றேன்? அனைத்துப் படைப்புக்களிலும் மேலானநிலையில் படைக்கப்பட்ட நான் இறைவனுக்குச் சொந்தம் என்பதை உணர ஆரம்பிக்கின்றேன். அவரது தொடர்ச்சியான கரிசனையை எண்ணி என்னை இறைவனுக்கு அர்ப்பணமாக்குகிறேன். மாறாக இறைவனை விட்டு விலகி ஓடும்போதெல்லாம் நான் துன்பம், வேதனை, வருத்தம் போன்றவற்றையே எனத் தாக்கிக் கொள்கிறேன் என்பதைப் புரிகின்றேன்.

நினிவே நாட்டு மக்களுக்கு மனமாற்றத்தின் நற்செய்தியை அறிவிக்க அழைக்கப்பட்ட இறைவாக்கினர் இறை அழைப்பை இதை ஏற்க மறுத்துத் தப்பி ஓட முனைகின்றார்.

**"யோனாவோ ஆண்டவரிடமிருந்து தப்பியோட எண்ணி தர்சீசுக்குப் புறப்பட்டார். கப்பலிலேறினார்"** (யோனா 1:2-3).

கப்பற் பயணம் இடையிலே குழப்பப்படுகிறது: கப்பலிலிருந்து தூக்கி எறியப்படுகிறார். திமிங்கலம் ஒன்று அவரை விழுங்குகின்றது. அதன் வயிற்றுக்குள்ளிருந்து கொண்டு யோனா ஓலமிடுகிறார். இறைவனிடம் தன்னை ஒப்படைக்கிறார். மூன்று நாட்களின் பின் திமிங்கலம் அவரைக் கரையில் கக்குகின்றது. இறை அழைப்பை ஏற்று நினிவே நகரத்து மக்களுக்கு இறைவார்த்தையை அறிவிக்கின்றார்.

இதிலிருந்து இறைவன் எனக்கும் உங்களுக்கும் நல்லதொரு பாடத்தைக் கற்பிக்கின்றார். இறைவன் திருமுன்னிலிருந்து எப்பொழுதெல்லாம் விலகி ஓடுகின்றோமோ அப்பொழுதெல்லாம் எமது வாழ்விலும் அலை மோதும், புயல் அடிக்கும், தூக்கி எறியப்படுவோம். அழுது புலம்பி ஆண்டவரிடம் எம்மை ஒப்படைத்து விடும்பொழுது தூய வெண்பனி போல் அவர் எம்மைத் தூய்மையாக்கிவிடுவார்.

தொங்கிக்கொண்டு துயரத்தின் உச்சக்கட்டத்தை அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில் கூட "தந்தையே உமது கையில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன்" என்று இறைவனிடம் தன்னை ஒப்படைத்தார்.

நாமும் இறைவனிடம் மண்டியிடுவோம். ஒழிப்பு, மறைப்பு, நடிப்பு என்று முகமூடிபோட்டு வாழும் நிலையை மாற்றி தரப்பட்டுள்ள இன்னொரு தபசுகாலத்தில் எம் நிலையை மாற்றி, பாவங்களிலிருந்து மீண்டெழுந்து புதுப் பயணத்தில் பயணிப்போம். ●

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

**11**

### அத்தியாயம் 5



**5.3 திருஅவைகளை, அவைகளின் சூழ்நிலைக்கு ஏற்ப, சீர்திருத்தம் செய்ய, இச்சங்கம் வழி திறந்தது.**

தென் அமெரிக்க நாடுகளுக்கு, ஸ்பானிய போர்த்துக்கேய காலனித்துவத்துடன் கிறிஸ்தவம் வந்தது. ஆனால் அதன் அருகிலே வசிக்கும் வட அமெரிக்க செல்வந்தரால் தென் அமெரிக்க நாடுகள் தொடர்ந்தும் கொள்ளை அடிக்கப்பட்டு வந்தது. அதேபோல், ஆபிரிக்க நாட்டு மக்களும், பல நூற்றாண்டுகளாக அடிமைகளாக விலை போனவர்கள் காலனித்துவத்திலும் கொள்ளையடிக்கப்பட்டவர்கள். அடிப்படை மனித வாழ்விற்குரிய வசதிகளின்றித் தவித்தவர்கள். இங்கே ஆரம்பிக்கப்பட்ட திருஅவைகளும், அந்நிய அமைப்புகளாக, சில இரக்க மனிதபிமான உதவிகளை மாத்திரம் செய்தார்களே ஒழிய, மக்களுக்கேற்ற வாழ்வைக் கொடுக்கவில்லை.

ஆசியாவைப் பொறுத்த மட்டில் அரும் பெரும் மதங்களையும் நாகரீகங்களையும் கொண்டிருந்தும், 16ஆம் நூற்றாண்டிற்கு பின் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ அவைகள் ஐரோப்பிய அந்நிய அமைப்புகளாகவே இருந்துவந்தன. ஆகையினால் ஐரோப்பிய திருஅவைகளுக்கு மாத்திரமல்ல, 16ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஆரம்பிக்கபட்ட திரு அவைகள் அனைத்திற்கும் 2ஆம் வத்திக்கான் சங்கம், புதுப்பித்தலுக்கு ஓர் அரும் பெரும் ஆவியின் கொடையாயிற்று.

**5.4 காலத்தின் அறிகுறிகளைப் புரிந்து, திருஅவையை நவீனப் படுத்துவதற்காகவே இச்சங்கம் கூடியது.**

இன்னும் இச்சங்கமோ வழமை போல் அல்லாது, இரண்டு விதத்தில் வேறுபட்டிருந்தது. 23ஆம் அருளப்பர் இச்சங்க ஆயத்த நிலையின் போதே அடிக்கடி விடுத்த அழைப்பு என்னவென்றால் - காலத்தின் அறிகுறிகளை வாசித்து, வியாக்கியானம் செய்து, திருஅவையைக் காலத்திற்குப், பொருத்தமாக நவீனப்படுத்துவது (aggiornamnto = read & interpret signs of the times and update the church accordingly) உலகத்தின் எல்லாக் கண்டங்களிலிருந்தும் இரண்டாயிரத்து முந்நூறுகளுக்கு மேலான ஆயர்களும் நூற்றுக்கணக்கான இறையியலாளரும் பங்கெடுத்த உலகத் திருஅவையின் முதல் கூட்டமாக இது அமைந்தது. ஆகையினால் இச்சங்கத்தின் ஏடுகள் உலகத்தின் எல்லா அவைகளுக்கும், எமது தமிழ்த் திருஅவைகளுக்கும், மிக முக்கியமானவை.

இக்காரணங்களினால் 2ஆம் வத்திக்கான் சங்கம் இன்றைய உலகைப் புதுப்பிக்க நிகழ்ந்த ஒரு புதிய பெந்தக் கோஸ்தாகப் போற்றப்படுவதோடு புனித 23ஆம் அருளப்பர் உலகத் திருச்சபையைப் புதுப்பிக்க வந்த தூதுவராகவும் போற்றப்படுகின்றனர்.

**5.5 2ஆம் வத்திக்கான் சங்கம்! திருஅவையின் சரித்திரத்தில் 21ஆவது சங்கம் ஆனால் எமது காலத்திற்கேற்ற மாற்றத்தை திருப்பத்தை ஊக்குவிக்கும் முதலாவது சங்கம்!**

திருஅவை முதல் 15 நூற்றாண்டுகளுக்குப் பின் திரிதெந்தீன் சங்கத்திலே இறுக்கமாகக் கட்டி அமைக்கப்பட்ட காலத்தைத் தொடர்ந்தே, தமிழ்க் கிறிஸ்தவம் இந்தியாவிலும், இலங்கையிலும் தொடங்கியதை மேலே கூறியிருந்தோம். கிறிஸ்தவம் ஆரம்பமாகி 19 நூற்றாண்டுகளின் பின், இம்மாபெரும் 2ஆம் வத்திக்கான் சங்கமே உலகளாவிய திருஅவையின் ஆயர்களின் சங்கமாயிற்று. தென் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாட்டவர்கள், சங்கத்தின் ஆயத்தக் குழுக்களில் பங்கெடுக்காவிட்டாலும், தயாரிக்கப்பட்ட ஏடுகள், போதிய அளவு தூரப் பார்வையுடனும், பரந்த உலகின் பார்வையுடனும், தயாரிக்கப்பட்டு இருந்தன.

எல்லோர்க்கும், அதாவது பழைமை வாய்ந்த ஐரோப்பியத் திருஅவைகளுக்கும், மற்றைய கண்டங்களில் சென்றடைந்த நூற்றாண்டுகளில் தோன்றிய இளம் திருஅவைகளுக்கும், மாறியிருக்கும் உலகத்தை உற்று நோக்கி, ஆராய்ந்து, பல தூர நோக்குடைய பார்வைகளையும், சூழலுக்கேற்ற மாற்றங்களையும், ஊக்குவிப்புக்கான சிந்தனைகளையும், கொடுத்திருந்தது. ஆகையால் சங்கம் நடந்த பொழுது ஐரோப்பியர் அல்லாத இளம் திரு அவைகளின் ஆயர்களும் தமது கருத்துக்களை, திருத்தங்களை எழுத்து மூலம் செய்ய முடிந்தது. (சங்கம் உத்தியோக பூர்வமாக இலத்தீன் மொழியில் நடைபெற்றது. ஆனால் எழுத்து மூலம் வேறு மொழிகளிலும் கருத்துத் தெரிவிக்கும் வசதியிருந்தது)

அத்துடன் சங்கத்தின் ஆரம்பத்திலேயே, பரந்த நோக்குடன், சங்கப் பிதாக்கள் மனுக்குலம் முழுவதற்கும் ஒரு நற்செய்தியை வெளியிட்டனர். மனுக்குலத்திற்கு செய்தி என்ற தலைப்பில் சங்கத்தின் 3 நோக்கங்களாக - நிறை வாழ்வு, அன்பு, அமைதி - என்பவற்றைத் தெளிவாக்கினர்

நான்கு வருடங்களாக, ஒவ்வெரு ஆண்டும் 10 வாரங்களுக்கு, வத்திக்கான் பேராலயத்தில் நடந்த சங்கக் கூட்டங்களில் ஏறத்தாழ 2400 ஆயர்களும் 100க்கு மேற்பட்ட இறையியலாளர்களும், பல பிற மதப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இடைக்காலங்களில் ஆயத்த வேலைகள் பல மட்டங்களில் உலகளாவிய ரீதியில் நடந்தன. இச்சங்கத்தினால் வெளியிடப்பட்ட 16 ஏடுகளும் சரித்திர முக்கியத்துவமான முறையில் பல திசைகளிலுமிருந்து சேர்க்கப்பட்ட ஆராய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு, சங்கக் கூட்டங்களில் பகுதி பகுதியாக விவாதிக்கப்பட்டு, 95 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளினால் முடிவு செய்யப்பட்டன..

உடனடியாக இந்த ஏடுகள் அனைத்தும் ஆர்வத்துடன் இலத்தீன் மொழியிலிருந்து, தமிழ் உட்பட, எல்லாளத் தாய் மொழிகளிலேயும் வெளியாயின.

ஆகையினால் இந்த முடிவுகளை, திரு அவைகள் அலட்சியப்படுத்த முடியாது.

*(தொடரும்...)*

## விண்ணக வாழ்வின் நினைவுகளில்

**இரண்டாம் ஆண்டு** **முதலாம் ஆண்டு**





### அமரர் ச.அ.சேவியர்
**மண்ணில் :- 18.05.1942**
**விண்ணில் :- 16.08.2020**

### அமரர் ஸ்கொலஸ்ரிக்கா சேவியர்
**மண்ணில் :- 09.07.1950**
**விண்ணில் :- 25.03.2021**

**அம்மா அப்பாவே!**
**நீங்கள் இறைமகனின் காலடி சென்று**
**ஓராண்டு ஓடிவிட்டது ஆனாலும்**
**உங்களோடு வாழ்ந்த காலங்களின் நினைவுகள்**
**இன்னமும் எம் கூடவே....**
**ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்**
**உங்கள் நினைவுகளோடு என்றும் நாம்....**

Ad-30

கருணையின் தேவனே இறைவா!

உயிரும் உயிர்ப்புமான உம் திருமகனின் பெயரில் நம்பிக்கை வைத்து வாழ்ந்து இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு, உமதண்டை வந்திருக்கும் இவ் ஆன்மாக்களுக்குப் பேரிரக்கம் காட்டியருளும். இவர்களது பாவங்கள் அனைத்தையும் மன்னித்து முடிவில்லாத பேரின்ப வாழ்வை இவர்களுக்கு அளித்தருள உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்.

**இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 25.03.2022 வெள்ளிக்கிழமை கரம்பொன் புனித செபஸ்ரியார் ஆலயத்திலும், கொழும்பு -06 வெள்ளவத்தை புனித லோறன்சியார் ஆலயத்திலும், 26.03.2022 சனிக்கிழமை யாழ். சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.**

42/1 *கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*அன்புடன் நினைவுகூரும்*
*மகள், மருமகன், சகோதரி, பேரன், பேர்த்தி*

14 B, இராசவள்ளி லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு -06

## 31ம் நாள் நினைவஞ்சலி

**பிறப்பு**
16 . 04 . 1940



**உதிர்வு**
17 . 02 . 2022

### அமரர் பிலோமினா எட்வேட்ராஜா

அம்மா!
ஆருயிர் தாயாக எம்மை ஆட்கொண்டீர்கள்
பெற்றெடுத்து, பாலூட்டி, சீராட்டி
நல்ல பண்புகள் கொடுத்தீர்கள்...
தலை நிமிர்ந்து நடக்க
தயை செய்தீர்கள்...
துன்பத்தில் துணையாக
துயரத்தில் பலமாக
துணிவோடு எமக்கு அருகில் இருந்தீர்கள்...
தூயவன் இயேசுவை அனுபவியுங்கள்
அம்மா! அப்பாவோடு சேர்ந்து
எமக்காகவும் செபியுங்கள்...
நன்றி அம்மா! எமக்காக எப்போதும் வாழ்வதற்கு...
அம்மா! உங்கள் ஆன்மா இறைவனின் இல்லத்தில்
அமைதியாக இளைப்பாற மன்றாடுகின்றோம்

AD-

பிள்ளைகள்

## 03ம் ஆண்டு நிறைவு நினைவேந்தல்

**மண்ணில் மலர்ந்த நாள்**
**14 . 06 . 1942**



**விண்ணில் கலந்த நாள்**
**26 . 03 . 2019**

### திருமதி மரியா மின்னொளி ஜூலியன்
**(லூர்த்துமலர்)**

மூன்று ஆண்டுகள் பறந்தோடிப் போயின
பாச நினைவோ எம்முயிரோடு வாழ்வன
நித்தமும் நெஞ்சிலே நின்றாடும் நாட்கள்
நெறியாக நாம் ஏந்தும் அர்ச்சனைப் பூக்கள்
குத்துவிளக்கே எம் குடும்ப நிறை ஒளியே
குளமாகி நிறைவதேன் எங்கள் விழியே
உத்தமியே உங்கள் வாழ்வே ஒரு காவியம்
உள்ளார்ந்த உணர்விலே நிலையான ஓவியம்

**இவர் வாழ்வுக்காக நன்றி கூற 26.03.2022ம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்கு பற்றி, அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.**

819 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9752 – 077 7498865

AD/29

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## விழி கனக்க விடை தந்த 31ம் நாள் நினைவு

**மலர்வு**
29 . 08 . 1944



**உதிர்வு**
18 . 02 . 2022

### அமரர் ஜோசேப் மரியதாசன்
**(செல்லத்துரை)**

"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை" (உரோ 6:8)

கண்மணிகளாய் எம்மை
கரங்களில் ஏந்திய நாள் முதல்
கண்ணியமாய் வழிநடத்தி
கல்வியில் சிறக்க வைத்து
கவலை தெரியாது வளர்த்து
கனிவு காட்டிய அப்பாவே!

கணப்பொழுதில் எம்மை
கதிகலங்க வைத்து விட்டு
கண்மூடிச் சென்றது ஏனோ?
கருணைத் தேவன் சந்நிதியில்
களிப்புடன் வாழ்ந்திடுவீர்
கண்மணிகள் நாம்
செபிக்கின்றோம் உமக்காக..

இளவாலை மேற்கு,
இளவாலை

AD- 26

கனத்த விழிகளுடன்
குடும்பத்தினர்

## நீங்காத நினைவுகளில்

**11ம் ஆண்டு**

**மண்ணில்**
08 . 05 . 1923



**விண்ணில்**
03 . 02 . 2011

### அமரர்
### ஜோசெவ் வில்பிறெட்

**31ம் நாள்**

**மண்ணில்**
25 . 02 . 1937



**விண்ணில்**
24 . 02 . 2022

### அமரர்
### மேரி பிலோமினா வில்பிறெட்

"என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
என்று கூறிய இயேசுவே இவர்களை நித்திய ஒளியில்
இளைப்பாறச் செய்தருளும் ஆமென்.

கீரியந்தோட்டம்
சில்லாலை.

AD-27

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் முதல் வருடம்

**மலர்வு**
16 . 10 . 1935



**உதிர்வு**
22 . 03 . 2021

### அமரர் ஒலிவற்றாணி அரசநாயகம்

அன்பான அன்னையே அணைந்த ஓராண்டில் அன்புடன் உம்மை நினைவு கூர்கின்றோம் அன்பான இறைவா! அன்னை வழியாக எமக்கு ஆற்றிய அளப்பரிய சேவைக்காய் நன்றி கூறுகின்றோம். ஆண்டவர் சந்நிதியில் அமைதியாய் இளைப்பாறுங்கள்.

**இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 22.03.2022 அன்று காலை 10.30 மணிக்கு இடம் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்

மிருசுவில்

AD-28

# சாதனைக்கு முந்திய சோதனைகள் நூல் வெளியீடு




செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த அருட்பணி ம. ஜோண் பொஸ்கோ அடிகள் எழுதிய இறையடியார் வண. B.A. தோமஸ் (O.M.I) அடிகள் வாழ்ந்த புண்ணியங்களை உள்ளடக்கிய நூல் வெளியீடு கடந்த 07.03.2022 அன்று. யாழ் ஆச்சிரம கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பு ரையாற்றியதோடு முதற் பிரதியை வெளியிட்டு வைக்க நூலாசிரியரின் தாயார் பெற்றுக்கொண்டார்.

அமல மரித்தியாகிகளின் மாகாண முதல்வர் அருட்பணி இயூஜின் பெனடிக்ட் (O.M.I) அடிகளும் செபமாலைத் தாசர் சபையின் மாகாண முதல்வர் அருட்பணி ஜெயசீலன் அவர்களும் கலாபூஷணம் S. யோசப்பாலா அவர்களும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

# சில்லாலையில் பங்குப்பணிமனைக்கு அடிக்கல்



சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் அமையப்பெற வுள்ள புதிய பங்குப் பணி மனைக்கான அடிக்கல் கடந்த 10ஆம் திகதி வியாழக்கிழமை நாட்டப்பட்டது. பங்குத்தந்தை அருட்திரு பிறாயன் அடிகள் இதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

# மத நல்லிணக்கத்தைத் தூண்ட முழங்காவிலில் சிறுவர்களுக்கான கருத்தரங்கு



முழங்காவில் பங்கில் நாகபடுவான் சோலை புனித வேளாங் கண்ணி ஆலயத்தில் மாசி மாதம் 24ம் திகதி மாணவர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கும், மதிய உணவு வழங்கல் நிகழ்வும் இடம் பெற்றது.

இப்பகுதியில் வாழும் சகல மதங்களையும் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள். கற்றல் பற்றிய விழிப் புணர்வுக் கருத்துரைகளும், விளையாட்டு நிகழ்வுகளும் தொடர்ந்து அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது. இதற்குரிய அனுசரணையையும் அனைத்து ஒழுங்குகளையும், யாழப்பாணம் சாள்ஸ் பொரோமியோ நற்பணி மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. பங்குத்தந்தையும்,மாலைநேர வகுப்பு ஆசிரி யர்களும் இதற்கான சகல ஆயத்தங்களையும் செய்துள்ளனர்.

# சுண்டுக்குளி வின்சென் டி போல் சபையின் வருடாந்த ஒன்றுகூடல்




யாழ் சுண்டிக்குளிப் பங்கின் புனித வின்செண்ட் டி போல் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 06.03 2022 அன்று நடைபெற்றது. யாழ் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை S. நேசநாயகம் அடிகளார், பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக அருட்சகோதரி டொறின் AC பங்கேற்றனர்.

# போரினால் அங்கவீனமுற்றவர்களுக்கு உதவி



பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள புலோப்பளைப் பங்கில் போரினால் கால்களை இழந்து பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஒரு தொகுதி நடை ஊன்றுகோல் மற்றும் ஒருவருக்கு சக்கர நாற்காலி என்பன அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

புலோப்பளைப் பங்குத்தந்தை அருட்திரு S. A. ஜோர்ஜ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் இந்நிகழ்வு புலோப் பளையில் அமைந்துள்ள இராயப்பர் ஆலயப் பங்குப் பணிமனையில் நடைபெற்றுள்ளதுடன் இதற்கான நிதி அனுசரணையை லண்டன் நாட்டில் வாழ்ந்துவரும் வேதநாயகம் சதீஸ்குமார் வழங்கியிருந்தார்.

# தர்மபுரத்தில் நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் மக்கள் பாவனைக்கு



வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் அனுசரனையில் தர்மபுரம் பங்குப் பணி மனையில் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் கடந்த 06ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. தர்மபுரம் பங்குத்தந்தை அருட்திரு நிக்ஸன் கொலின்ஸ் அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு செபஜீவன் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் அருட்திரு போல் நட்சத்திரம் அ.ம.தி அடிகள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

# அளம்பில் வீதிச் சிலுவைப்பாதை



அளம்பில் புனித அந்தோனியார் ஆலய இளையோர் ஒன்றியத்தி னரால் ஒழுங்கு செய்யப்பட்ட வீதிச் சிலுவைப்பாதைத் தியானம் கடந்த 11ஆம் திகதி அங்கு நடைபெற்றது. இச்சிலுவைப்பாதைத் தியானத்தில் பங்குமக்களும் திருச்சிலுவையைத் தாங்கியவாறு பக்தியுடன் பங்கு பற்றினார்கள். சிலுவைப்பாதையின் இறுதியில் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்பட்டது.

# என் உயிரானவரே இறுவட்டு வெளியீடு



“என் உயிரானவரே” திருவழிபாட்டுப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியீடு 06.03.2022 ஞாயிற் றுக்கிழமை அன்று யாழ் பிரதான வீதியில் அமைந் துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது. கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தைச் சேர்ந்த ஜெயசிங்கரட்ணம் விதுஷாவின் முயற்சியில் உருவான பாடல்களே இவ் இறுவட்டில் வெளிவந்துள்ளது.

அருட்பணி செ. அன்புராசா அ.ம.தி அடிகளின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம விருந்தி னராக யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் ப.யோ. ஜெபரட்ணம் அடிகளும், சிறப்பு விருந்தினராக அமலமரிதியா கிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்பணி இயுஜின் பெனடிக்ற் அ.ம.தி அடிகளும், கௌரவ விருந்தினர்களாக மேலதிகக் கல்விப் பணிப் பாளர் திரு. க. பிறட்லி அவர்களும், மற்றும் இசைத் தென்றல் திரு. மா. இயேசுதாஸன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். அருட்பணி ம. ஜெறோ செல்வநாயகம் அடிகள் இறுவட்டிற்கு நயப்புரை வழங்கிச் சிறப்பித்தார்.

# புதுமடத்தில் வின்சன் டி போல் சபை உதயம்



மானிப்பாய் பங்கிலுள்ள புதுமடம் கர்த்தர் ஆலயத்தில் புனித வின்சன் டி போல் பந்தி அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு கடந்த 06ஆம் திகதி இடம்பெற்றது. காலைத் திருப்பலியைத் தொடர்ந்து அங்கு நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் பங்குத்தந்தை அருட்திரு றெக்ஸ் சவுந்தரா அடிகளினால் இச்சபை அங்கு ஆரம்பித்துவைக்கப்பட்டது.


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**ஆரோக்கியநாதர் அக்நேஸ் அம்மா**

மலர்வு 19 . 06 .1952
உதிர்வு 30 . 03 . 2021

ஆண்டொன்று போனாலும்
ஆறவில்லை எம் துயரம்
அன்பெனும் மழை பொழிந்து.
அகிலத்தில் எம்மை வாழ வழிவகுத்து.
ஆதரையில் எம் வாழ்வின் உயர்வுக்காய்.
அரும்பாடுபட்டு உழைத்த அம்மாவே!
அன்பு மனைவியாய். அணைத்து வளர்க்கும் அன்னையாய்
ஆசையாய் அழைக்கும் அப்பம்மா. அம்மம்மாவாய்.
வாழ்ந்த தெய்வமே!
ஆண்டவர் சந்நிதியில் நித்திய அமைதி பெற
அடியவர் நாம் ஆண்டவனை வேண்டுகிறோம்

AD - 22

நானாட்டான்,
மன்னார்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அன்புக்கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.